19.03.2024 வா.சா.1 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி. (ஒ.எஸ்.எண். 81 /2019)
திரு.சௌந்திரராஜன்.
2ம்பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி.

தபசில் சொத்து எனது தகப்பனாரின் பெயரில் இருப்பதைக் காட்டக்கூடிய ஆவணம் தாக்கல் செய்யாததாலும், எனக்கு பூர்வீகமாகப் பாத்தியப்பட்டது என்பதை காட்டக்கூடிய ஆவணம் தாக்கல் செய்யாததாலும் தபசில் சொத்தை பொறுத்து எனது வழக்கு நிலை நிற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தபசில் சொத்தை 1ம்பிரதிவாதி 2ம்பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்தால் 12 ஆண்டுகள் கழித்து தாக்கல் செய்துள்ள வழக்கு காலவதி தோஷத்தினால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கு மூலம் தவறானது என்றாலும் வழக்கிற்காக பொய்யாக தாக்கப்பட்டது என்றால் சரியல்ல. நிருபண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள 1429 பசலி ஆண்டுக்கான ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பிராது தபசில் சொத்து தற்போது வருவாய்தறை ஆவணங்கள் யாருடைய பெயரில் பட்டா உள்ளது என்ற விவரத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

4ம்பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை – வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.
திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
19.03.2024.